# தமிழீழத் தேசிய மாவீரர் நாளை முன்னிட்டு
# தமிழர் ஒருங்கிணைப்புக் குழு – பிரான்சு
# தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும்

## கலைத்திறன் போட்டி 2024

## விதிமுறைகள்

- பிரிவுக்கேற்ற பேச்சு தெரிவு செய்யப்படாவிட்டால் போட்டியில் இருந்து நீக்கப்படுவார்.
- பாட்டுப்போட்டியில் அங்கீகரிக்கப்பட்ட தாயக விடுதலைப் பாடல்களை மட்டுமே பாடலாம்.
- தனிநடிப்பின் கரு போட்டியாளரின் விருப்பத் தேர்வாக இருக்கலாம்.
- தனிநடிப்பின் கரு எமது பண்பாட்டு விழுமியங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- கட்டுரைப் போட்டி பிரெஞ்சு மொழியில் நடைபெறும்.
- கட்டுரைப் போட்டியின் தலைப்பு போட்டி மண்டபத்தில் வழங்கப்படும்.
- கட்டுரைத் தலைப்புக்கள் சர்வதேச, ஈழ வரலாறு, அன்றாட அவதானிப்புக்கள், நவீன அவதானிப்புக்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.
- கவிதை தமிழில் எழுதப்பட வேண்டும், படித்துக்காட்ட வேண்டியதில்லை.
- கவிதையின் கரு போட்டியாளர் விரும்பியதாக இருக்கலாம்.
- ஓவியப் போட்டிகள் நகரத் தமிழ்ச்சோலைகளில் நடைபெறும்.
- தரப்படும் ஓவியத் தாளில் ~~1.30~~ 2-00 மணி நேரத்தில் ஓவியம் வரையப்படவேண்டும்.
- ஓவிய முறைகளுக்கு அமைவாக ஓவியம் வரையப்பட வேண்டும்.
- போட்டி நடைபெறும் நாட்களில் குறிப்பிட்ட நேரத்திற்கு சமூகம் அளிக்க வேண்டும்.
- போட்டிகளில் நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
- ஒவ்வொரு போட்டிக்கும் கட்டணம் 5 யுரோக்கள்.
- போட்டிகள் யாவும் நவம்பர் மாதம் 2,3,9,10 திகதிகளில் நடைபெறும்.

## பிரிவுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாலர் பிரிவு | | 27.11.2018 | அன்றும் அதன் பின்பும் பிறந்தோர் | | |
| அ | பிரிவு | 27.11.2015 | முதல் | 26.11.2018 | வரை பிறந்தோர் |
| ஆ | பிரிவு | 27.11.2012 | முதல் | 26.11.2015 | வரை பிறந்தோர் |
| இ | பிரிவு | 27.11.2009 | முதல் | 26.11.2012 | வரை பிறந்தோர் |
| ஈ | பிரிவு | 27.11.2006 | முதல் | 26.11.2009 | வரை பிறந்தோர் |
| உ | பிரிவு | 27.11.2003 | முதல் | 26.11.2006 | வரை பிறந்தோர் |
| ஊ | பிரிவு | 27.11.2003 | அன்றும் அதன் முன்பும் பிறந்தோர் | | |


தொடர்புகளுக்கு

தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் – பிரான்சு

மாறன் : 07 67 78 70 53 – செல்வா 06 20 54 66 36

மேலதிக தகவல்களுக்கு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு – பிரான்சு

01 48 22 01 75

**தமிழீழத் தேசிய மாவீரர் நாளை முன்னிட்டு**

**தமிழர் ஒருங்கிணைப்புக் குழு – பிரான்சு**

**தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும்**

# கலைத்திறன் போட்டி 2024

## விண்ணப்பப் படிவம்

(ஒவ்வொரு போட்டிக்கும் தனிப் படிவம் நிரப்புக)

முழுப் பெயர் : ..........................................................................................

பிறந்த நாள் : ............................................. பிரிவு : .............................................

தொலைபேசி எண் : ............................................. அலைபேசி : .............................................

பேச்சுத் தலைப்பு : ..........................................................................................

பாடல் : ..........................................................................................

இறுவட்டு : ..........................................................................................

பேச்சு ☐ கட்டுரை ☐

பாட்டு ☐ ஓவியம் ☐

கவிதை ☐ தனிநடிப்பு ☐

எம் தேச விடுதலைக்காக வித்தான மாவீரர் நினைவுப் போட்டியின் விதிகளை மதித்து ஒத்துழைப்பு நல்குவேன் என இத்தால் உறுதி அளிக்கிறேன்.

ஒப்பம் : ............................................. திகதி : .............................................

**மாவீரர்நாள் கலைத்திறன் போட்டிகள்**
**2024**
**பேச்சுப்போட்டி**

# பாலர் பிரிவு

## மறப்போமா மாவீரர்களே !

யார் இந்த மாவீரர்கள்? தேடினேன். கேட்டதைச் சொல்கிறேன் கேளுங்கள்.

தாயக விடுதலையை நெஞ்சில் சுமந்தவர்கள்.

தலைவர் மாமா தலைமையில் எம் மக்கள் வாழ காவலாய் நின்றவர்கள்.

எம் இன விடிவிற்காய் தம்மையே தந்தவர்கள்.

இவர்களை நாம் மறந்துவிடலாமா?

கற்பனை நடிகர்களை திரையில் பார்த்து மகிழ்ந்தது போதும்.

வாருங்கள்!

எம் மாவீரர் புகழ் பாடி மகிழ்வோம்!!

நன்றி

## மாவீரர்நாள் கலைத்திறன் போட்டிகள்
## 2024
## பேச்சுப்போட்டி

# பிரிவு அ

## தளபதி யெயம் மாமா

சுகேந்திரன் என்ற இயற்பெயர்கொண்ட யெயம் மாமாவைப் பெற்ற தாய்மடிதான் வன்னிமண்ணின் பாவற்குளம்.

எல்லைச் சிற்றூர்களை சிங்களம் விழுங்க முற்பட்டபோது தன் மண்ணையும் மக்களையும் காப்பதற்குத் தன்னையும் போராளியாக இணைத்துக்கொண்டார் யெயம் மாமா.

இந்தியாவில் மூன்றாவது பயிற்சிப் பாசறைப் போராளியாக வளர்ந்தவர். பின் தாயகம் வந்து வன்னிமண்ணில் தன் பணியைத் தொடங்கினார்.

கொக்கிளாய்த் தாக்குதல். ஒட்டுசுட்டான் காவல் நிலையத் தாக்குதல் என சமர்கள் விரிந்து தொடர்ந்தன.

1987 இல் வன்னிமாவட்டப் பொறுப்பாளராக ஓய்வில்லாமல் இயங்கிய மாமா. ஆனையிறவு வெற்றி. தீச்சுவாலை நடவடிக்கை. வேவு அணிப்பொறுப்பு. மன்னார் மாவட்டத் தளபதி எனப் பல ஆற்றல் களுடன். தேசக் காதலை நெஞ்சில் சுமந்த தமிழீழத்தின் வீரப்புதல்வன் யெயம் மாமா.

நளாயினி எனும் பெண் போராளியை வாழ்க்கைத் துணையாக்கியவர். 2009 முள்ளிவாய்க்கால் இறுதிவரை இருவருமே போராடியவர்கள். மனவுறுதியோடு கொள்கைமாறாது. இறுதிவரை தாய் மண்ணை நேசித்தார்கள்.

தன்கையால் ஒருபிடி மண் அள்ளி நெஞ்சில் அணைத்தபடி. சயனைற் குப்பியைக் கடித்தபடி முள்ளிவாய்க்கால் மண்ணில் வீரச் சாவடைந்தார் யெயம் மாமா.

மாமாவுக்கு வீர வணக்கம்!

**மாவீரர்நாள் கலைத்திறன் போட்டிகள்**
**2024**
**பேச்சுப்போட்டி**

# பிரிவு ஆ

## அம்மாவின் ‘அ’ எழுதிய நினைவுகள்

முற்றத்து மண் அள்ளி சுற்றங்கள் சூழ, ஒன்றுகூடி கசடு அறக் கற்ற சான்றோன் ! முன்னிலையில் அம்மா தன் மடியமர்த்தி என் விரல் பற்றி மண்மீது ‘அ’ எழுது என்றார்.

‘தித்திக்கும் தேன்தமிழ் திகட்டாத இன்பத் தமிழ் மீது பற்றுவை’ என்றார் அம்மா.

அம்மாவின் விரல் பற்றி ‘அ ’ எழுதிய நினைவுகள் என்னையும் அன்னை மண்ணில் எழுதப் படிக்கத் தூண்டுகிறது.

அம்மா! நான் உன்னை விட்டுப் பிரிந்தாலும் எம் தாய் மண்ணை விட்டு என்றுமே பிரிய மாட்டேன்.

அன்னை மண்ணைக் கொஞ்சம் கிள்ளி வாருங்கள் ! தமிழ் பிள்ளைகள் எங்கள் மண்ணைத் தொட்டு எழுதத் தொடங்கட்டும். அறிவையும் ஆற்றலையும் வளர்க்கட்டும் .

மாவீரர்நாள் கலைத்திறன் போட்டிகள்
2024
பேச்சுப்போட்டி

## பிரிவு இ

# முகவரியைத் தேடுகின்றோம்

நெடுந்தொலைவிலிருந்து இங்கு வந்தனர் எம்மை ஈன்றவர்கள். ஏன் இங்கு வந்தார்கள்? அது நாம் அறிந்த கதை. ஆனால், நாம் இங்கே பிறந்து வாழ்கின்றோம். அதனால், நாம் இந்த நாட்டுப் மரபுவழிக் குடிகளாகி விடுவோமா? எம்முடன் வாழும் ஒவ்வொருவருக்கும் ஒரு மரபுவழி உள்ளது.

எமக்கென்று எங்கேனும் ஒரு நாடு உண்டா?

எங்கே எமது தாயகம்?

இப் பூமிப்பந்தில் முகவரி தொலைத்தவர்களா நாம்?

ஏன் இந்த நிலை நமக்கு?

சற்றே சிந்தித்துப் பாருங்கள்! இராவணன், எல்லாளன், குளக்கோட்டன், சங்கிலியன், பண்டாரவன்னியன் என்றெல்லாம் கற்றோமே? இவையெல்லாம் பழங்கதையா? இவர்கள் எம் மண்ணைக் காத்து எம் பண்பாட்டு விழுமியங்களைக் காப்பதற்காக போராடியவர்கள், காப்பாற்றியவர்கள்.

2009 வரை, எமது தேசியத் தலைவன் வழிகாட்டலில் தலைநிமிர்ந்து நின்றது எமது தாயகம், கல்லறையில் துயிலும் எம் மாவீரரின் காவலில் அச்சம் என்பதே அறியாத, அழகான வாழ்விருந்தது எம் இனத்தார்க்கு!

எங்கே போயின அவையெல்லாம்? தொலைத்தவற்றை அப்படியே விட்டுவிடலாமா? அவற்றை மீட்டெடுப்பது எமது கடமையல்லவா?

உலகெங்குமுள்ள யூத இனத்தவர்கள் தங்கள் முகவரியை அறியாதது போல,

ஒரு நெடுந்தேடலில் தன் வேரை அலெக்ஸ் ஜோலி தேடியது போல, நாமும் எமது முகவரியை மீட்டெடுக்க அணியமாவோம்...! அணிசேர்வோம்....!

# மாவீரர்நாள் கலைத்திறன் போட்டிகள்
# 2024
## பேச்சுப்போட்டி

## பிரிவு ஈ

## ஏந்துவோம் அறிவாயுதம்

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக உறுதியுடன் போராடிய மாவீரர்களின், போராளிகளின் ஈகம் வீண்போகலாமா?

விழி குத்தி விக்கித்து நிற்கின்றது தேசம். நினைவுகள் மட்டுமே மிச்சமாக உள்ளன. மேய்ப்பாரில்லாமல் தவிக்கிறது ஈழத்தமிழினம். அறிவாயுதத்தைக் கையில் எடுப்போம். ஏமக்கான அரசியல் உறுதிப்பாட்டை உருவாக் குவதற்கான முனைப்புகளை முன்னெடுப் போம். அதனூடாக எம்மொழியைக் கற்று அதன்வழி வரலாற்றையும் அரசியலையும் கற்போம். அதுவே எம் ஆயுதம்.

" நிலம் இழந்து போனால்

பலம் இழந்து போகும்

பலம் இழந்து போனால்

இனம் அழிந்து போகும் "

ஆகவே தமிழா உன் தாய்நிலத்தைக் காதலிக்கக் கற்றுக்கொள். நாட்டுக்காகப் போராடினோம்.

ஆனால், இன்று ஏதிலிகளாக நாடு நாடாக ஓடிக்கொண்டிருக்கின்றோம். முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட போராளிகள், பல நூறாயிரக் கணக்கான பொதுமக்கள் சிந்திய குருதி எங்களைக் கேள்வி கேட்கின்றது.

நாம் இன்று அனைத்தையும் இழந்தும் எம் வலிகளை மறந்து எதிரியின் திட்டமிட்ட செயற்பாடுகளுக்கு துணைபோகின்றமையை இன்று காண்கின்றோம்.

இது எமது இனத்தின் விடுதலை நோக்கிய பயணத்திற்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது.

இதனை மாற்றி அமைப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் சிந்தித்து செயலாற்ற வேண்டியது இன்றியமையாததாக உள்ளது.

"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிதென்று வாழ்வோம்" என்று எம் தலைவர் கூறினார்.

தாயகத்துக்கான ஆயுதப் போராட்டம் அமைதி கொண்டாலும் விடுதலைக்கான வேள்வி தொடர்ந்து எரிந்து கொண்டே இருக்கவேண்டும்.

உடைந்த வீடுகள், காடாகிப் போன கழனிகள், சிதைந்த கோயில்கள், மிகப் பெரிய பற்றைக் காடுகளாகிப் போன ஊர்கள் எல்லாமே எம்மைப் பார்த்து வினாக்களைத் தொடுக்கின்றன.

எம் சிந்தனையைத் தீட்டுவோம். அறிவைக் கையில் எடுப்போம். அறிவாயுதத்தால் விடுதலையை வென்றெடுப்போம். எமது அறிவையும் ஆற்றலையும் ஆளுமையையும் தேசத்தை நோக்கித் திருப்புவோம்.

ஒளி படைத்த கண்களும் உறுதி கொண்ட நெஞ்சுரமும் உடைய இளையோரே நாட்டை மீட்க வாருங்கள்!

விழித்தெழு தமிழா.. தமிழன் என்ற உணர்வுடன் விழித்தெழு!

காலங்கள் கடந்த பின் விழித்தெழுந்து எந்தப் பயனுமில்லை தமிழா !

# மாவீரர்நாள் கலைத்திறன் போட்டிகள்
# 2024
# பேச்சுப்போட்டி

## பிரிவு உ

## போராளித்தாயும் புறநானூறும்

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள'
எனும் வள்ளுவர் கூற்றுக்கமைய பெண் என்பவள் மாபெரும் ஆற்றலாக விளங்குகின்றாள்.
பாசத்துக்கும் இரக்கத்துக்கும் உரிய பெண் மறுபக்கத்தில் வீரத்தின் விளைநிலமாய்
இருந்ததை புறநானூற்றில் காணக்கூடியதாக உள்ளது.

நாட்டுக்காகப் பெற்றோரை, கணவனை, பெற்ற பிள்ளையை இழக்க அணியமாக இருந்தவர்கள் புறநானூற்று பெண்கள். போராளித்தாய், நாட்டுக்காகத் தன்னையே கொடுத்தாள். அரையில் வாளும் மார்பில் கவசமும் பூண்டவர்களாய், வில் வேல் முதலிய ஆயுதப்பயிற்சி உடையவர்களாய் வீரயுகப் பெண்கள் இருந்தனர்.

அவர்கள் நேரிடையாகப் போரில் ஈடுபடாவிடினும் தம் புதல்வரைப் போருக்கு அனுப்பும் நெஞ்சுரம் கொண்டவர்கள்.

எமது போராளித்தாய் வெடிகுண்டுகளைத் தன் உடலில் சுமந்துகொண்டு தானே ஆயுதமாக மாறினாள். போர்க்கப்பல்களைச் சிதறவைத்தாள். அன்றிலிருந்து இன்றுவரை தமிழ்ப் பெண்களின் வீர உணர்வும் மனப்பான்மையும் தன்மானத்தைப் பெரிதென மதிக்கும் மனப்பாங்கும் மாறவில்லை.

தன் இளம் அகவை மகனைப் போருக்கு அனுப்பிய புறநானூற்றுத்தாய், அவன் இறந்த செய்தியை அறிந்தவுடன் என் மகன் மார்பில் புண்பட்டு வீரனாய் உயிர்விட்டானா? அல்லது முதுகில் புண்பட்டுக் கோழையாய் இறந்தானா? என்ற வேட்கையுடன் போர்க்களம் செல்கின்றாள்.

"அவன் போர்க்களத்தில் புறங்காட்டினான் என்பது உண்மையானால் அவனுக்குப் பாலூட்டிய மார்பினை அறுத்தெறிவேன் " என்று சூளுரைத்துச் சென்றவள், அவன் மார்பில் புண்பட்டு உயிர் துறந்ததைக் கண்டு ஈன்ற பொழுதில் பெரிதுவந்தாள்.

புறநானூற்றுப் பெண்ணின் இல்லத்துக்கு வந்த ஒருவர் , உன் மகன் எங்கு உள்ளான் ? எனக் கேட்கிறார்.
அதற்கு அவள், "இதோ என் வயிற்றைப் பார்! புலி இருந்த குகை இது! புலி குகையை விட்டுப் போராடச் சென்று விட்டது" என்கிறாள்.

புறநானூற்றை விஞ்சிய வீரம் படைத்தவர்கள் எமது பெண் போராளிகள்! அடுப்போடு போராடியவர்கள் நெருப்பாக எழுந்தனர்! குருதியால் தம் வரலாற்றை எழுதினர்!
ஒரு பெண்போராளி கூறும்போது..
எத்தனை களங்கள் கண்டன என் கால்கள், கனத்த கருவியைத் தோளில் சுமந்து தொலைதூரம் எதிரியை விரட்டிய என் கரங்கள் ... என்கிறார்.

போராளித்தாயின் திறவினைகளைக் கொண்டு பல புறநானூறுகளை எழுதலாம்.
கணவனையும் பிள்ளைகளையும் போருக்கு அனுப்பிவிட்டு அவர்கள் வீட்டில் காத்திருந்தனர்.
ஆனால், எமது போராளித்தாய் நேரடியாகப் பங்குகொண்டாள்.

கூவி வந்த எறிகணைக்காய் குனிந்தோம், அடுத்த எறிகணை வந்து விழும் முன்னே விரைந்தோம்...
இவள் புயலாக, புலியாக தேசத்தை அதிர வைத்தாள், காயப்பட்டவரைத் தோளில் சுமந்துகொண்டு நாட்டுக்கான தன் பணியைத் தொடர்ந்தாள். இவளின் மூச்சொலி தாயகக் காற்றோடு கலந்து என்றும் உயிர்ப்புடன் தாயக மண்ணில் வாழ்கிறது.

"அடக்க நினைப்பவருக்கு அடங்காதே எழுந்து நில்! எதிர்த்துப் போராடு!!" என்பதே அன்றும் இன்றும் மானம் மிக்க மகளிரின் வாழ்வியல்!

# மாவீரர்நாள் கலைத்திறன் போட்டிகள்
# 2024
## பேச்சுப்போட்டி

## பிரிவு ஊ

# கரும்புலிகள் தமிழினத்தின் காவல் தெய்வங்கள்!

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும்"

இனத்தின் விடுதலைக்காக உயிரீகை செய்தவர்களை இறைநிலைக்கு உயர்த்திப் பார்ப்பது தமிழரின் மரபேயாகும் எனக் கூறுகிறது தமிழ்மறை.

தமிழரின் இந்த மரபுக்கமைய கரும்புலிகள் தமிழினத்தின் காவல் தெய்வங்கள்...!

இரண்டாம் உலகப்போரின் போது அமெரிக்கப் படைநிலைகள் மீது யப்பானியர்களால் நடத்தப்பட்ட தற்கொடைத் தாக்குதல்களை 'கமிக்காஸ்' என அழைத்தனர். 'கமிக்காஸ்' என்னும் யப்பானியச் சொல்லுக்கு இறைநிலை என்பதே பொருள் !

தமிழ் இலக்கியங்கள் பாடியவை பொய்யல்ல என்று 2000 ஆண்டுகளுக்குப் பின் மெய்ப்பித்த தமிழீழத் தேசியத் தலைவரின் உயிராயுதம் கரும்புலிகளே..!

எம்மினத்தின் கனவுகளை நனவாக்கி, விடுதலையை வென்றெடுக்க வந்த ஆற்றல்மிக்க பேராயுதம்... தன்னினத்தின் மீது கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறைக்கு எதிராக உயிரீகம் செய்த போராயுதம் கரும்புலிகளே..!

பலவீனமான என் இனத்தின் பலம்மிக்க ஆயுதமாகவே கரும்புலிகளைப் பார்க்கிறேன் என்பதே தமிழீழத் தேசியத்தலைவரின் எண்ணக்கரு. தமிழரின் படைவலுவை வேறு எந்த நாட்டுப் படையுடனும் ஒப்பிட முடியாத வலிமையை வெளிப்படுத்தியவர்களே கரும்புலிகள் ..!

உயிருள்ள ஆயுதங்களாக போராட்டத்தின் வெற்றிகளை ஈட்டிய வீரர்களாகவே கரும்புலிகளைத் தமிழினம் பார்க்கின்றது.

தமிழர் போரியல் வரலாற்றில் பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயருக்கு எதிராக முதன்முதலில் தற்கொடைத் தாக்குதல் நடத்தி அழிவை ஏற்படுத்தியவர் குயிலி என்னும் வீரமங்கையாவார்.

தமிழீழத்துப் போரியல் வரலாற்றில் முதன்முதலில் 05.07.1987 இல் மில்லர் நெல்லியடி சிங்களப்படைத் தளத்தில் தற்கொடைத் தாக்குதல் நடத்தி "ஒப்பரேசன்லிபரேசன்" என்னும் சிங்களப்படையின் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தினார்.

மில்லரின் தாக்குதலை எதிர்பார்த்திராத சிங்கள அரசு, இனியும் தமிழர் படையை வெல்ல முடியாது எனக் கணித்துக் கொண்டு, இந்தியாவோடு ஒப்பந்தம் செய்துகொண்டது.

மில்லரின் தாக்குதலுக்கும் சிறிலங்கா இந்திய ஒப்பந்தத்திற்கும் இடையே வெறும் 25 நாட்களே என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கரும்புலிகளின் உயிர் ஈகம் என்பது போராட்ட வரலாற்றில் பெரும் வெற்றிகளை ஈட்டுவதற்கு முன்மாதிரியாக அமைந்திருந்தது. இந்த நேரத்தில் கரும்புலி என்னும் தேசத்தின் தடைநீக்கிகள் அனைவரையும் எம்மனக்கண்முன் நிறுத்திப் போற்றுவோம்.

ஒவ்வொரு ஆண்டும் யூலை 5 ஆம் நாள் எம் கரும்புலி மாவீரர்கள் அனைவரையும் நாம் வணங்கிப் போற்றிவருகின்றோம்.

களம் காண விரைவதற்கு முன் ஒவ்வொரு கரும்புலி மறவர்களையும் எம் தேசத்தின் தலைவர் சந்தித்து அவர்களோடு உரையாடி, உணவருந்தி, வழி அனுப்பிவைக்கும் கணப்பொழுது கல்லையும் கரையவைக்கும் தருணமாகவே அமைகின்றது. அதனை வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத அளவிற்கு மனம் கனத்து நிற்கின்றது.

எம் தேசப் புதல்வர்களை மனதில் இருத்தி எமது விடுதலை வேட்கையை நோக்கிப் பயணிப்போமாக!

- தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் !

# தமிழீழத் தேசிய மாவீரர் நாளை முன்னிட்டு
## தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - பிரான்சு
## தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும்

# மாவீரர் நாள் கலைத்திறன் போட்டிகள் 2024

## ஓவியம் (ஏற்பாட்டாளர்)

### போட்டிக்கு முன்னர் செய்துகொள்ள வேண்டிய முன் ஏற்பாடுகள்.

1. போட்டி நடைபெறும் நிலையத்தில் கதிரை. மேசை அடுக்குதல் முதலான மண்டப ஒழுங்கினை அதற்குரியவர்களுடன் தொடர்பு கொண்டு ஏற்பாடு செய்து கொள்ளுதல்.

2. மண்டபத் தேர்வு மேற்பார்வையாளர்கள் தமக்கான நிலையத்தில் தோற்றவிருக்கும் போட்டியாளர்களுக்கான வரைதல் தாள் பொதியினை - கலை பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு - போட்டி நடைபெறும் நாளுக்கு முன்பாக பெற்றுக்கொள்ளுதல்.

3. போட்டி தொடங்கவிருக்கும் நேரத்திற்கு முன்னதாக தோற்றவிருக்கும் போட்டியாளர்களுடைய வரவு. பெயர் விபரம். சுட்டெண். அவசியமற்ற பொருட்களை மண்டபத்துள் அனுமதியாமை என்பவற்றைக் கவனித்து உறுதி செய்து கொள்ளல் அத்துடன் அதற்குரிய படிவத்தில் போட்டியாளர்கள் வரவை உறுதி செய்து ஒப்பத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. குறித்த நேரத்தில் வரைதல் தாள்களை வழங்கிப் போட்டியாளர்கள் ஓவியம் வரைதலுக்கான ஏது நிலையைப் பேணுதலும் மேற்பார்வை செய்தலும், நிறைவடையும் நேரத்தில் சரிபார்த்துப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

5. பெற்றுக்கொண்டதாள்களைஉரியமுறையில்பாதுகாப்பாகப்பொதிசெய்துஅத்துடன்அதற்கானபடிவங்களையும்சேர்த்து அன்றைய நாளே தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - பிரான்சு பணிமனையில் அல்லது தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தில் ஒப்படைத்தல் முக்கியமானதாகும்.

அடுத்து.

பொதியிடப்பட்டு மேற்பார்வையாளர்களிடம் ஒப்படைக்கப்படும் வரைதல்தாள் பற்றிய விளக்கத்தைக் கவனிப்போம்.

வரைதாள் அளவு - 320 மி.மீ நீளம் 240 மி.மீ அகலம் - 180 கிராம் (போட்டியாளர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப போட்டி நேரத்திற்கு முன்னதாக கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

வரைதல் தாளின் பின்புறம் இடம் பெறும் விடயங்களைக் கவனியுங்கள்

சுட்டெண் :- ☐☐☐☐ ☐☐☐☐

பிரிவு :- அ ☐ ஆ ☐ இ ☐ ஈ ☐ உ ☐ ஊ ☐

பிறந்த நாள் ☐☐ ☐☐ ☐☐☐☐

(இவை இடம் பெறுவதுடன் கலைபண்பாட்டுக்கழக இலட்சனை பொறிக்கப்படல் வேண்டும் )

தமிழீழத் தேசிய மாவீரர் நாளை முன்னிட்டு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - பிரான்சு
தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும்

# மாவீரர் நாள் கலைத்திறன் போட்டிகள் 2024

## ஓவியம் (மேற்பார்வையாளர்)

போட்டியாளர்களுக்கான கீழ் வரும் அறிவுறுத்தல்களை போட்டி ஆரம்பிக்கும் முன்னர் அவர்களுக்குப் புரியவைத்தல் வேண்டும்.

ஓவியம் வரையும் பக்கத்தில் போட்டியாளரின் பெயர் விபரங்களைக் குறிப்பிடுவதைத் தவிர்த்தல், அத்துடன் ஓவியத்திற்குத் தலைப்பிடல் போன்றவை இடம் பெற்றால் போட்டியிலிருந்து குறித்த ஓவியம் நீக்கப்படும்.

சொந்தக் கருத்தாக்கத்திற்குக் கூடிய புள்ளிகள் வழங்கப்படும்.

வரைதலுக்கான நேரம் இரண்டு மணித்தியாலம் வழங்கப்படும்.

போட்டியின்போது வரைதல் தாள் தவிர்ந்த வரைதலுக்கான உபகரணங்களைப் போட்டியாளரே கொண்டுவருதல் வேண்டும்.

போட்டி மண்டபத்தினுள் முன்னரே வரைந்த அல்லது பார்த்து வரைதலுக்கான ஏதுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது.

வரைதல்தாள் முழுமையாகப் பயன்படுத்துதல், முழுமையாக வர்ணம் தீட்டுதல் வேண்டும். எவ்வகை வர்ணங்களும் பாவிக்கலாம்.

1. போட்டி தொடங்கவிருக்கும் நேரத்திற்கு முன்னதாக தோற்றவிருக்கும் போட்டியாளர்களுடைய வரவு, பெயர் விபரம், சுட்டெண், அவசியமற்ற பொருட்களை மண்டபத்துள் அனுமதியாமை என்பவற்றைக் கவனித்து உறுதி செய்துகொள்ளல். அத்துடன் அதற்குரிய படிவத்தில் போட்டியாளர்கள் வரவை உறுதி செய்து ஒப்பத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

2. குறித்த நேரத்தில் வரைதல் தாள்களை வழங்கிப் போட்டியாளர்கள் ஓவியம் வரைதலுக்கான ஏதுநிலையைப் பேணுதலும் மேற்பார்வை செய்தலும். நிறைவடையும் நேரத்தில் சரிபார்த்துப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

3. பெற்றுக் கொண்ட தாள்களை உரியமுறையில் பாதுகாப்பாகப் பொதி செய்து அத்துடன் அதற்கான படிவங்களையும் சேர்த்து அன்றைய நாளே தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - பிரான்சு பணிமனையில் அல்லது தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தில் ஒப்படைத்தல் முக்கியமானதாகும்.

தலைப்புக்கள்

கீழ்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவுசெய்து அதற்குப் பொருத்தமான ஓவியங்களை வரைந்து வர்ணம் தீட்டுதல் வேண்டும்.

1. மாவீரர் தியாகம்
2. தேசப்பற்று
3. விடுதலையுணர்வு
4. மனிதநேயம்
5. இயற்கையை மதித்தல்